පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, නැගෙනහිර පළාත, ත්‍රිකුණාමලය
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், திருகோணமலை
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, EASTERN PROVINCE, TRINCOMALEE

ඔබේ අංකය / உமது இல / Your No

මගේ අංකය / எனது இல / My No : EP/07/03/01/01/2024

04.01.2025

**<u>கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2024</u>**

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் 03.08.2024ம் திகதி நடாத்தப்பட்ட மேற்குறித்த போட்டிப்பரீட்சையின் பெறுபேற்றுக்கமைய ஆரம்ப தகுதிகளைப் பெற்ற தங்களது சான்றிதழ்களை பரிசோதிப்பதற்கான நேர்முகப்பரீட்சை மற்றும் அதனை தொடர்ந்து நடாத்தப்படும் பிரயோகப்பரீட்சை என்பன கீழ்க்குறிப்பிட்ட வகையில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**Date :** **Board No :**
**Time : 9 a.m.** **Seat No :**
**Venue : Provincial Council Secretariat – Eastern Province, Kanniya Road, Varothayanagar, Trincomalee.**

நேர்முகப்பரீட்சைக்காக கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் **மூலப்பிரதிகளையும், நிழற்படப்பிரதிகளையும்** கொண்டு வருதல் வேண்டும் என தெரிவிப்பதோடு குறித்த தினத்தில் தாங்கள் நேர்முகப்பரீட்சைக்காக சமூகமளிக்காதவிடத்து இது சம்பந்தமாக பின்னர் தங்களது மேன்முறையீடுகள் எதுவும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

1. க.பொ.த. (சா/த) சான்றிதழ்
2. க.பொ.த. (உ/த) சான்றிதழ்
3. பட்டச்சான்றிதழ் / டிப்ளோமா சான்றிதழ். {பட்ட / டிப்ளோமா சான்றிதழ், கற்ற பிரதான பாடங்களை உள்ளடக்கிய சான்றிதழ், கற்ற அனைத்து பாடங்களையும் உள்ளடக்கிய பெறுபேற்றுத்தாள் (Transcript)}
4. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக 2021,2022,2023 வருடங்களுக்காக பெற்றுக்கொண்டுள்ள தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பு
5. கிராம உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் வதிவிட, குணநலச் சான்றிதழ் (06 மாதங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும்)
6. தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
7. பிறப்புச் சான்றிதழ்
8. குணநலச் சான்றிதழ் (06 மாதங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும்)
9. தேவைப்படுகின்ற ஏனைய சான்றிதழ்கள்

**குறிப்பு : மேற்குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களும் நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேர்முகப்பரீட்சையின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.**

தாங்கள் சாதாரண நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் பட்சத்தில் மாத்திரம் அத் தினத்திலேயே நடைபெறும் பிரயோகப்பரீட்சைக்கு அனுப்பப்படுவீர்கள். எனவே 05 நிமிடங்களுக்கான வாய்மொழி மூலமான சமர்ப்பித்தலொன்றுக்கு (Oral Presentation) தயாராகி வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறீர்கள். (தாங்கள் ஒன்றிக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பித்திருப்பின், அப்பாடங்களுக்கான பிரயோகப்பரீட்சைக்காக ஆயத்தமாக வருவதோடு நேர்முகப்பரீட்சை சபையினால் எப்பாடத்திற்கான பிரயோகப்பரீட்சைக்கு தாங்கள் உட்படுத்தப்படுவீர்கள் என்பது அறியத்தரப்படும். தங்களது சமர்ப்பித்தலுக்கு தேவையான கற்பித்தல் உபகரணங்களை தாங்களே கொண்டுவருதல் வேண்டும்.

தாங்கள் இந்நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பது நியமனம் உறுதி செய்யப்பட்டுள்ளது என கருதப்படலாகாது.

**ஜே. லியாகத் அலி,**
செயலாளர்,
மா.பொ.சே.ஆ – கி.மா.

**<u>தொலை பேசி / දුරකතන / Telephone</u>**

அலுவலகம் / කාර්යාලය / Office : 026 2220092
தொலைநகரி / ෆැක්ස් / Fax : 026 2222174
மின்அஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E-mail : ppsc@ep.gov.lk

கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය
Kanniya Road, Varothayanagar, Trincomalee

SAMPLE

தங்களது கவனத்திற்கு :-

1. நேர்முகப்பரீட்சை இடம்பெறும் கிழக்கு மாகாண சபையின் பேரவைச்செயலாளர் காரியாலய வளாகத்திற்குள் நுழைய விண்ணப்பதாரருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

2. இத்துடன் அனுப்பப்படும் நேர்முகப்பரீட்சை வரிசை எண்ணினை தெளிவாக தெரியும் வண்ணம் அணிந்து வர வேண்டும். அதேபோல் இத்துடன் அனுப்பப்படும் படிவத்தினையும் சரியாகவும் முழுமையாகவும் பூர்த்தி செய்து கொண்டு வருதல் வேண்டும்.

3. தாங்கள் கிழக்கு மாகாண சபையின் பேரவைச்செயலாளர் காரியாலய வளாகத்திற்குள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருக்கும் வேளை தங்களுக்கான நேர்முகப்பரீட்சை தருணத்தின் போது தாங்கள் அழைத்து செல்லப்படுவீர்கள்.

4. நேர்முகப்பரீட்சையில் தங்களது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் போட்டோ பிரதிகளை இந்த அழைப்புக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவரிசையில் தனித்தனியாக நேர்முகப்பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5. நேர்முகப்பரீட்சையின்போது ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கமைவாக தகைமைகளை தாங்கள் உறுதிப்படுத்தின் மாத்திரமே பிரயோகப்பரீட்சைக்கான அனுமதி அட்டை தங்களுக்கு வழங்கப்படும்.